
உ

சிவமயம்



அமரர்

# விநாயகமூர்த்தி நவரத்தினம்

அவர்களின்

# நினைவு மலர்

03-07-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தாயே நின் திருவடிக் கீழ்

எம் குடும்பத் தலைவன்

*வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்*

**வி. நவரத்தினம் *B. A.* அவர்களை**

ஆதரவாக அமர்த்திக்கொள்.

'அன்னை இல்லம்'
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

குடும்பத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்
வித்துவான் பண்டிதர் சைவப்புலவர்

# வி. நவரத்தினம் B.A.

தோற்றம்
08.03.1916

மறைவு
03.06.2000

## திதி

விக்கிரம ஆண்டு வைகாசி வளமார் சனிநாள்
தக்க ஏறுபிறை பிரதமையில் - எய்தினான்
மக்கள் மன மாசகற்றிய நவரத்தின நல்லோன்
தக்கார் சேர் சிவனடிக்கே தேர்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் வணக்கம்

சுக்லாம் பரதம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே
மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விலம்பித ஸூத்ரே
வாமன ரூபம கேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

## தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கைமுடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறுநல்ல நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக் குயாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

— சம்பந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போதுணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணிய னே.

இடுக்கண் பட்டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற் கீழ்க் கிடக்கினு மருளினாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

— அப்பர்

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூ ரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாய் இனி அல்லேனென லாமே.

தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையு
மேத்தலா மிடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள் வதற்
கியாது மையுற வில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி ஓம் நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றி ஓம் நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றி ஓம் நமச்சி வாய
புறம் எனைப் போக்கல் கண்டாய்
போற்றி ஓம் நமச்சி வாய
சய சய போற்றி போற்றி.

— மணிவாசகர்

புவன் நாயகனே! அகவுயிர்க்(கு) அமுதே!
பூரணு ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே! பணி செய்வார்க்கு
இரங்கும் பசுபதீ! பனனகா பரணு
அவனி ஞாயிறு போன்(று) அருள்
புரிந்(து) அடியேன் அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப் பூங்கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமை நீங்குதற்கே.

— கருவூர்த்தேவர்

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும்என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்

பரமனை மதித்திடாப் பங்கை யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒளிந்த வானவர்
குருதியு மகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனை போற்றி செய்குவாம்.

— புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

சிவனார் மனங்குளிர உபதேச மந்திரமிரு
செவி மீதிலும் பகர்செய் — குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலே விரும்பி உளம் — நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலும்
அடியேனை அஞ்சலென — வரவேணும்
அறிவாகமும் பெருக இடரானதும் தொலைய
அருள் ஞான இன்பமது — புரிவாயே
நவநீதமும் திருடி உரலோடே ஒன்றுமரி
ரகுராமர் சிந்தை மகிழ் — மருகோனே
நவலோகமுங் கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு — விளைகோவே
தேவயானையங் குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சு கதிர் — வடிவேலா
திருவாவினன் குடியில் வருவேள் சவுந்தரிக
செகமேல் மெய்கண்ட விறல் — பெருமாளே.

— அருணகிரியார்

உ

சிவமயம்

ஒளவையார் அருளிச்செய்த

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையி னினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயிலொரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பினாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்மமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டிக்
அணுவிற் கணுவா யப்பா லுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே !

● ● ●

உ

சிவமயம்

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் — கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

### நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய னடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகம் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியும் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர வடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாபிக் கமலம் நல்வேல் காக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பச் சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தனெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதி னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைத்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்துஉகந்துநீ றணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலா போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.

## கந்தலரங்காரம்

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங் கூற்றென் செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

## கந்தரநுபூதி

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழித்துணையே.

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்னுந்
துதியுறு சேவடியாய் சிந்து ரானன சுந்தரியே.

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண்மகி டன்றலைமே
லந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத் தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாளென் கருத்தனவே.

நின்றுமிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு ளேயுமையே யிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்ன மேபுவி யேழையும் பூத்தவளே.

பூத்தவளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயன்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயமான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானவை சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்த வர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயிற் றாவுகங்கை
பொங்கலை தங்கும புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள் பசும் பெண்கொடியே.

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்செய்யு
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளே து மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன் ற
னருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே.

கைக்கே யணிவது கன்னலும் பூவுங்கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்ப்பவளே.

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையா
ளவளைப் பணிமின்கண் டீரமராவதி யாளுகைக்கே.

வாணு தற்கண்ணியை விண்ணவர் யாவரு வந்திறைஞ்சிப்
பேணு தற்கெண்ணிய வெம் பெருமாட்டியைப் பேதைநெஞ்சிற்
காணு தற்கண்ணிய மல்லாத கன்னியைக் காணு மன்பு
பூணு தற்கெண்ணிய வெண்ணமன் றோமுன் செய்புண்ணியமே.

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமா
மவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினா
லிவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந்
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு செய்யாது நின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டு செய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டு செய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின் வெறுக்கையன்றே.

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றே யுமில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லா
மன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே.

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

நாயே னையுமிங் கொருபொரு ளாகநயந்து வந்து
நீயே நினைவின்றி யாண்டு கொண்டாய் நின்னையுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
றாயே மலைமகளே செங்கண் மாறிருத் தங்கைச்சியே.

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமுஞ் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே.

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
யவ்வியந் தீர்த்தென்னை யாண்ட பொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலியப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
யடியே னிறந்திங் இனிப்பிற வாமல் வந் தாண்டு கொள்ளே.

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ளமுருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
யடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல்லா நின்னருட்புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னருளேதென்று சொல்லுவதே.

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத் தெழுந்த
புத்தியும் புத்தியினுள்ளே புரக்கும் புரத்தையன்றே.

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவி அடங்கக்
காத்தாளை, அங்குச பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு
தீங்கில்லையே.

---

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவு இலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் விநாயகமூர்த்தி நவரத்தினம் அவர்களின்

## வாழ்க்கைத்தடம்

ஒரு சிலர் பிறப்பால் பிறந்த இடம் பெருமை பெறுகின்றது. காரணம் அவர்கள் கல்வி அறிவு ஒழுக்கம் தொண்டு வழிகாட்டற் பண்பு என்பனவே உழைப்பால் உயர்ந்து, ஒழுக்கத்தால் நிமிர்ந்து நின்று தம்மவரையும் உயர்த்துகிறார்களே, இவர்களே மக்கட் பண்பு நிறைந்தோர்.

இந்தவரிசையில் தோன்றியவரே அமரர் நவரத்தினம் அவர்கள். வட்டுக்கோட்டைப் பதி விநாயகமூர்த்தி மாரிமுத்து தம்பதிகளின் நற்தவப் பேறாய் 08-03-1916இல் தோன்றியவர் அமரர் நவரத்தினம்.

இவர் உடன் பிறப்புகளான செல்லப்பாபிள்ளை, இரத்தினம் அன்னம், இராசம்மா, பாக்கியம் அனைவரும் இவர் முன்பே இறையடி எய்தினர்.

அமரர் தன் ஆரம்பக் கல்வியை முறையே யாழ் / மத்திய கல்லூரியிலும் திருஞானசம்பந்த வித்தியாசாலையிலும் கற்றார். அன்று புகழ் பூத்த பேராசான்கள் C. K சுவாமிநாதன், கைலாசபதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை போன்றோரிடம் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார்.

அமரர் தம் ஆசிரியப் பணியை அராலி ஆங்கிலப் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி, பண்டைத்தரிப்பு பெண்கள் பாடசாலை ஆகியவற்றில் இனிதே நிறைவு செய்தார்.

தன் சுய முயற்சியால் பண்டிதர் வித்துவான், சைவப்புலவர் B. A தேர்வுகளிலும் வெற்றி பெற்றார். தெளிந்த அறிவுத்திறனும் ஆழ்ந்த சிந்தனையும், செஞ்சொற் பெருக்கும் இவர் சிறப்புகளாம். எனவே உயர் வகுப்பு மாணவர்களை தன்பால ஈர்த்தார் என்று சொல்லலாம் வேண்டுமா? கற்பித்த கல்லூரிகளில் இந்து இளைஞர் கழகங்களின் புரவலராய் இருந்து, நெறிப்படுத்தியதோடு அமையாது, தமிழ், சமயக் கலைகளையும் அலங்கரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22-4-1952இல் இராசநாயகம் செல்லம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வி வள்ளிநாயகியை தன் வாழ்க்கைத்துணைவியாகக் கொண்டு வளமார இல்லறத்தை நடத்தியவர் அமரர் நவரத்தினம்.

"தக்கார் தகவிலர் என்பது அவர்தம்
எச்சத்தால் காணப் படும்"

என்றார் வள்ளுவர். நவரத்தினம் வள்ளிநாயகி இல்லறச் சோலையில் இனிதே மலர்ந்து மணம்பரப்பி வாழ்கிறார்கள் இவர்கள் பெற்ற மக்கட் செல்வங்கள்.

தலைமகள் கலாவதி B. Sc (Hons) மானிப்பாய் கயிலாயபிள்ளை அன்னமுத்து தம்பதிகளின் புதல்வன் சுந்தரலிங்கத்தை மணந்து இங்கிலாந்து நியுகாம் மருத்துவ மனையில் பணியாற்றுகிறார். இவர்கள் மழலைச் செல்வங்கள் சுஜீவா கோகுலரமணன் இருவரையும் பேரப்பிள்ளைகளாகப் பெற்றார் அமரர் நவரத்தினம்.

மகன் கலைச்செல்வன் B. Com ( Hons ) கணக்காளர். M. D. A கொழும்பு காரைநகர் கனகரத்தினம் மங்கையர்க்கரசி தம்பதிகளின் புதல்வி தனலக்குமியை மணந்து, கஜானந்தா, கலைப்பிரியா, நிஜானந்தா என மூன்று குழந்தைச் செல்வங்களைப் பெற்று வாழக்கண்டு மகிழ்ந்தார் நவரத்தினம்.

மகன் கலாபரன் B. Sc ( Hons ) இங்கிலாந்தில் ஒரு சர்வதேசிய அமைப்பில் எந்திரியராகப் பணிபுரிகிறார். இவரை கோண்டாவில் இராசதுரை தேவராணி தம்பதிகளின் மகள் குகதேவிக்குத் தந்து, அபிராமி, ஆரணி என இரு மழலைகள் இன்சொல்கேட்டு மகிழ்ந்தார்.

மகள் கலைவாணியை காரைநகர் பரமநாதன் நாகம்மா தம்பதிகளின் மகன் கணக்காளர் (U. K) லோகேஸ்வரனுக்குத் துணையாக்கி துவாரகா, அபிசன் என இருவரையும் மேலும் பிள்ளைகளாகப் பெற்று மகிழ்ந்தார் நவரத்தினம்.

"மங்கலம் என்பது மனைமாட்சி அதன்நன்கலம்
நன் மக்கட் பேறு" இது வள்ளுவம்

அமரர் வி. நவரத்தினம் கற்றவர்; கற்பித்தவர்; வாழ்வாங்கு வாழ்ந்தார்; வாழ்வித்தவர்; நன்மக்கட்பேற்றால் உயர்ந்தவர்; 84 ஆண்டுகள் இசைபட வாழ்ந்தவர்.

வந்த வேலையை இனிதே முடித்து முடியாத இறை இன்பம் எய்தினார். வாழ்க அவர் நாமம்.

— அன்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஒரு மாணவனின் நினைவில்...

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும்
— போனான்
மையோமர கதமோ மறிகடலோ மழை முகிலோ
வையோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.

கம்பராமயணத்தில் பலரும் ரசித்துப் படிக்கும் செய்யுள் இது. இராமர் கதை குறித்து உரையாற்றுவோரும் இந்தச் செய்யுளுக்குச் சிறப்பான நயப்புரைகள் கூறத்தவறுவதில்லை.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் (ஐம்பதுகளில்) எஸ். எஸ். ஸி வகுப்பறையில் தமிழ் இலக்கியப் பாட போதனையின் போது, எங்கள் ஆசான் வித்துவான் வ. நவரத்தினம் இந்தச் செய்யுளை ஓசை நயம் ஓங்க, இனிய குரலில் நயந்து பாடும் பொழுது மாணவர்களாகிய நாம் மெய் மறந்து போவோம். தமிழ் இலக்கியத்தில் அவரைப் போலவே நாமும் துய்க்க வேண்டும் என்ற மன உந்துதல் பிறக்கும்.

வித்துவான் நவரத்தினம் அவர்களிடம் தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் ஆகியவற்றைப் பயிலும் பாக்கியம் பெற்ற மாணவர்களில் நானும் ஒருவன்; அது பெரும் பேறு எனலாம்.

உயர்ந்த, எடுப்பான தோற்றம், தமிழ்த் தேசிய உடை, முழங்காலை முட்டும் அழகு சேர்க்கும் உத்தரியம், எந்நாளும் வெண்ணிற ஆடையே அவரது மேனியை அலங்கரிக்கும். வகுப்பறைக்குள் வரும் போது ஒரு கம்பீரமான நடை, அவரது காலடிச் சத்தம் இரண்டு மூன்று வகுப்பறைகளுக்கு அப்பால் கேட்கும் போதே, பின்வாங்குகளில் இருந்து அமளி செய்யும் மாணவர்கள் அடங்கிப்போய் விடுவார்கள். வகுப்பறைக்குள் வரும் போது தனக்கே உரிய புன்சிரிப்புடன் நுழைவார். அதன் பின்னர் பெரும் கண்டிப்பு.

வித்துவான் அவர்களுக்குத் தமிழ்ப்பற்று மிக அதிகம். அவரது உடலிலும் உள்ளத்திலும் இறுதிக் காலம் வரை தமிழ் பொங்கிப் பிரகாசித்தது. அவர் தமிழைப் பயிற்றுவித்த பாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் போன்ற எமது வகுப்பின் முன்வரிசை மாணவர் களிடம் தமிழ்ப் பற்றையும் உணர்வையும் வளர்த்தது.

இலக்கியத்தை மட்டுமன்றி, தமிழ் இலக்கணத்தையும் தெளிவாகவும் துலக்கமாகவும் இலகுவில் விளங்கிக்கொள்ளுமாறும் ரசனையோடும் பயிற்றுவிக்கும் வித்துவான் அவர்களின் ஆற்றல் தனித்துவமானது. வகுப்பில் மிகவும் இளையவனாக இருந்த என்மீது அவருக்கு ஒருவகைப் பிடிப்பு; பற்று என்றும் கூறலாம்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்ற செய்யுள்களைப் பாடிய பின்னர், எனது பெயரைக் குறிப்பிட்டு, இப்போது இந்தச் செய்யுளை "இவர்" பாடுவார் என்று சொல்வார். அவ்வாறு நான் பாடிய பின்னர் செய்யுளுக்கும் பல உவமான உவமேயங்களை எடுத்துச் சொல்லி விளக்குவார். தம்மைப் போன்று பாடும் சிறுதகுதி என்னிடம் இருப்பதைக் கண்டார் போலும்.

வித்துவான் பண்டிதர் நவரத்தினம் ஐயாவிடம் ஊறியிருந்த தமிழ்ப் புலமை என்ற பேராற்றில் இருந்து சிறுதுளிகள் என்னைப் போன்ற சிலரை நனைத்ததில் அவருக்குப் பெரும் மனக்களிப்பு. தமது இறுதிக் காலத்திலும் அதனைப் பெருமையுடன் பேசிக்கொண்டார்.

கொழும்பில் பணியாற்றிய காலை அவரைச் சந்திக்கும் வாய்ப்பு இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் முதற்தடவை யாழ். பஸ் நிலையத்தில் சந்தித்தவேளை, உதயன் – சஞ்சீவி பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றுவதாகக் கூறினேன். அத்தனை கூட்டத்தினர் பார்த்திருக்க, தனது பிள்ளைகளைச் சிறுவயதில் உச்சிமோந்த பாங்கில், வாஞ்சனையுடன் கட்டித் தழுவி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். "நல்ல தமிழ் எழுதுகிறாய்; அப்படியே தொடர்ந்து செய்" என்றார். அவரது அந்த வாக்கு மனதில் ஆழப்பதிந்திருக்கும்.

வித்துவான் அவர்களின் தமிழ்ப் புலமையும் தமிழைப் பயிற்றுவிக்கும் சிறப்பான ஆற்றலும் தனித்துவமானவை. சங்க இலக்கியப் பாடல்களைப் பயிற்றுவிக்கும் போது அவற்றை நயந்து பாடி, சந்தம், சீர் பிரித்து இசைத்து, பயன் - பொருள் - விளக்கும் தன்மை அலாதியானது.

வித்துவான் நவரத்தினம் அவர்கள் தமிழ் மீது மட்டுமன்றி தான் பிறந்த தமிழ் மண் மீதும் அடங்காப் பற்றுக்கொண்டவர். ஒரு சில மாதங்களுக்கு முன்னர் கோண்டாவிலில் அவரின் இல்லம் சென்று தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளில் வளத்துடன் வாழ்கிறார்கள். அங்கு வந்து தம்மோடு வாழுமாறு பாசத்தொல்லை கொடுத்தார்கள். ஆனால் அவர் கேட்கவில்லை. தாம் இந்த மண்ணிலேயே சாகவேண்டும் என்ற பிடிவாதத்துடன் இங்கே இருக்கிறார் என அவரது துணைவியார் கூறினார்.

செவிப்புலன் குறைந்திருந்த போதிலும் அதனை உணர்ந்து கொண்டு, சொந்த மண்ணில் வாழ்வதிலும், சாவதிலும் உள்ள சிறப்பைக் குறிக்கும் ஒரு பாடலை மெல்லியதாகப் பாடினார். பழைய தமிழ் இலக்கியம் பாட வகுப்பறை நிழலாடியது.

தமிழைத் துறைதோயக் கற்ற தமிழ் வித்தகரும் மண் பற்று மிகுந்தவருமான நல்லாசான் வித்துவான் நவரத்தினம் அவர்களின் மாணவன் என்பது என்றும் பெருமைக்குரிய சிறப்புப் பதக்கமாகும்.

அவர் புகழ் என்றும் நின்று வாழ்க.

ம. வ. கானமயில்நாதன்
பிரதம ஆசிரியர்
உதயன் — சஞ்சீவி

யாழ்ப்பாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

## உலகில்

| | | |
|---|---|---|
| மிக நீண்ட நதி | — | நைல் (எகிப்து) |
| உயர்ந்த மலைச்சிகரம் | — | எவரெஸ் (நேபாளம்) |
| பெரிய நாடு (பரப்பளவு) | — | ரஷ்யா |
| பெரிய நாடு (சனத்தொகை) | — | சீனா |
| அதிகம் பேசப்படும் மொழி | — | மண்டாரின் (சீனா) |
| பெரிய சமுத்திரம் | — | பசுபிக் |
| பெரிய தீவு | — | கிறீன்லாந்து |
| பெரிய பாலைவனம் | — | சஹாரா (ஆபிரிக்கா) |
| அதிக மக்கள் பின்பற்றும் மதம் | — | கிறிஸ்தவம் |
| உயர்ந்த நீர்வீழ்ச்சி | — | சல்டோ ஏஞ்சல் (வெனிசுவெலா) |
| உயர்ந்த கட்டடம் | — | சியரஸ்டவா (சிக்காக்கோ) |
| பெரிய விமான நிலையம் | — | மன்னர் காலித் சர்வதேச விமான நிலையம் (சவூதி) |
| அதிக வேக ரயில் | — | புல்லட் ரயில் (ஜப்பான்) |
| பெரிய வளைகுடா | — | மெக்ஸிக்கோ |
| மிகப்பெரும் நன்னீர் ஏரி | — | சுப்பீரியர் (அமெரிக்கா) |
| பெரிய சிலை | — | சுதந்திரதேவி சிலை (அமெரிக்கா) |
| பெரிய சுவர் | — | சீனப்பெருஞ்சுவர் |
| பெரிய தேவாலயம் | — | சென்பீற்றர்ஸ் (றோம்) |
| பெரிய நூதனசாலை | — | பிரிட்டிஸ் மியூசியம் (லண்டன்) |

## உலக முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| சர்வதேச பெண்கள் தினம் | — | மார்ச் 8ந் திகதி |
| உலக ஊனமுற்றோர் தினம் | — | மார்ச் 15ந் திகதி |
| உலகவன தினம் | — | மார்ச் 21ந் திகதி |
| உலக ஆரோக்கிய தினம் | — | ஏப்ரல் 7 |
| உலக பத்திரிகை சுதந்திர தினம் | — | மே 8 |
| உலக செஞ்சிலுவை தினம் | — | மே 8 |
| உலக குடும்ப தினம் | — | மே 15 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சர்வதேச தகவல் தொடர்பு தினம் | — | மே 7 |
| பொதுநலவாய தினம் | — | மே 24 |
| சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம் | — | மே 31 |
| உலக சுற்றுச் சூழல் தினம் | — | ஜூன் 5 |
| உலக மக்கள் தொகை தினம் | — | ஜூலை 11 |
| உலக எழுத்தறிவு தினம் | — | செப்ரெம்பர் 8 |
| உலக ஓசோன் தினம் | — | செப்ரெம்பர் 26 |
| உலக முதியோர் தினம் | — | ஒக்ரோபர் 01 |
| உலக உணவு தினம் | — | ஒக்ரோபர் 16 |
| ஐக்கிய நாடுகள் தினம் | — | ஒக்ரோபர் 24 |
| உலக எயிட்ஸ் தினம் | — | டிசம்பர் 01 |
| உலக மனித உரிமைகள் தினம் | — | டிசம்பர் 10 |

## சாட்டுப் பெயர்கள் (Sobriquet)

| | | |
|---|---|---|
| சூரியன் உதிக்கும் நாடு | — | ஜப்பான் |
| நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு | — | நோர்வே |
| உலகின் சக்கரைக் கிண்ணம் | — | கியூபா |
| இருண்ட கண்டம் | — | ஆபிரிக்கா |
| புனித நகரம் | — | ஜெருசலேம் |
| ஐரோப்பாவின் நோயாளி | — | துருக்கி |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | — | சுவிஸ் |
| உலகின் முகடு | — | திபெத் |
| வெள்ளை யானை நாடு | — | பர்மா |
| கங்காரு நாடு | — | அவுஸ்திரேலியா |
| கிழக்குலக பிரிட்டன் | — | நியூசிலாந்து |
| ஆயிரம் ஏரிகள் நாடு | — | பின்லாந்து |
| சூரியன் அஸ்தமிக்காத நாடு | — | பிரிட்டன் |
| நைல் நதியின் கொடை | — | எகிப்து |
| தடை செய்யப்பட்ட நகரம் | — | திபெத் |
| பவளத்தீவு | — | அயர்லாந்து |
| 5 நதிகளின் பூமி | — | பஞ்சாப் |
| சீனாவின் துயரம் அல்லது மஞ்சள் நதி | — | குவாங்கோ |
| 7 மலைகளின் நகரம் | — | றோம் |
| கிழக்குலகின் நெற்களஞ்சியம் | — | பர்மா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுகளின் பாராளுமன்றங்களின் பெயர்

| | | |
|---|---|---|
| ஜேர்மனி | — | பண்டெஸ்ரக் |
| துருக்கி | — | கிருண்ட் நசனல் அசெம்பிளி |
| சிரியா | — | மஜ்லிஸ் அல்நவாம் |
| சுவிஸ் | — | பெடரல் அசெம்ப்ளி |
| சுவீடன் | — | றிக்ஸ்டாக் |
| ஸ்பெயின் | — | கோட்டெஸ் |
| ரஷ்யா | — | சுப்றீம் சோவியத் |
| போர்த்துக்கல் | — | கோட்டெஸ் |
| ஈரான் | — | மஜ்லிஸ் |
| பல்கேரியா | — | சோப்றான்ஜே |
| டென்மார்க் | — | றிக்ஸ்டார்க் |
| பிரான்ஸ் | — | நசனல் அசெம்பிளி |
| ஐஸ்லாந்து | — | அல்திங் |
| இந்தியா | — | லோக்சபா மற்றும் ராஜ்சபா |
| இஸ்ரேல் | — | க்னெசெற் |
| ஜப்பான் | — | டயற் |
| இத்தாலி | — | செனற் |
| நோர்வே | — | ஸ்ரோட்டிங் |
| போலண்ட் | — | சேயம் |

## விளையாட்டுச் சாதனைகள்

### கிரிக்கெற் (ரெஸ்ற்)

1. ஒரு இன்னிங்ஸில் அதிகூடிய ஓட்டம் எடுத்த தனி நபர் பிறயன் லாரா (375 ஓட்டங்கள் இங்கிலாந்துக்கெதிராக)
2. அதிகூடிய விக்கெட்டுக்கள்
   1. ஜிம்லேக்கர் (இங்கிலாந்து) 10 விக்கெட்
   2. அனில் கும்பளே (இந்தியா) 10 விக்கெட்
3. அதிகூடிய விக்கெட் வீழ்த்தியவர்
   கபில்தேவ் (இந்தியா) 434 விக்கெட்
4. அதிகூடிய ஓட்டங்கள்
   அலன் போடர் 11152 ஓட்டம் (அவுஸ்திரேலியா)
5. அதிக சதம் பெற்றவர்
   சுனில் கவாஸ்கர் (இந்தியா) 34 சதம்
6. ஒரு இனிங்ஸில் ஒரு அணி பெற்ற கூடுதல் ஓட்டம்
   952 இலங்கை (இந்தியாவுக்கெதிராக)
7. குறைந்த ஓட்டம்
   45 இங்கிலாந்து (மே. இ. தீவுக்கெதிராக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளின் விபரங்கள்

| நாடு | தொலைபேசி கோட் | தலைநகரம் | நாணயம் | பிரதான மொழி |
|---|---|---|---|---|
| ஆர்ஜன்ரீனா | 0054 | புவனஸ் எயார்ஸ் | பெசோ | ஸ்பானிஸ் |
| அவுஸ்திரேலியா | 0061 | கான்பெரா | டொலர் | ஆங்கிலம் |
| அவுஸ்திரியா | 0043 | வியன்னா | சில்லிங் | ஜேர்மன் |
| அல்பேனியா | ....... | திரானா | லெக் | அல்பேனியன் |
| பிறேசில் | 0055 | பிறேசிலியா | ரியால் | போர்த்துக்கீசு |
| ஐக்கிய ராச்சியம் | 0044 | லண்டன் | ஸ்ரேலிங்பவுண் | ஆங்கிலம் |
| ஐக்கிய அமெரிக்கா | 001 | நியூயோர்க் | டொலர் | ஆங்கிலம் |
| பங்களாதேஷ் | 00880 | டாக்கா | டாக்கா | வங்காளி |
| பூட்டான் | 00975 | திம்பு | நகுல்ட்ரம் | ஷோங்கா |
| பெல்ஜியம் | 0032 | பிறஸல்ஸ் | பிராங் | டச்சு |
| கனடா | 001 | ஒற்றவா | டொலர் | ஆங்கிலம் |
| சீனா | 0086 | பீயிங் | யென் | மண்டாரின் |
| டென்மார்க் | 0045 | கோபன்கேகன் | குரோன் | டானிஸ் |
| எகிப்து | 0020 | கைறோ | பவுண்டு | அரபு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| பிரான்ஸ் | 0033 | பாரிஸ் | பிராங் | பிரெஞ்சு |
| கிறீஸ் | 0030 | எதென்ஸ் | டிரெச்மா | கிரேக்கம் |
| இஸ்ரவேல் | ...;... | டெல்கவிவ் | ஷெகெல் | ஹீப்று |
| இந்தியா | 0091 | புதுடில்லி | ரூபாய் | ஹிந்தி |
| ஈரான் | 0098 | ரெஹ்றான் | றியால் | பாரசீகம் |
| ஈராக் | 00964 | பக்தாத் | தினார் | அரபு |
| குவைத் | 00965 | குவைத் | தினார் | அரபு |
| ஜோர்தான் | 00962 | அம்மான் | தினார் | அரபு |
| சவூதி அரேபியா | 00966 | றியாட் | றியால் | அரபு |
| ஜப்பான் | 0081 | ரோக்கியோ | யென் | ஜப்பானிஸ் |
| இந்தோனேசியா | 0062 | ஜகார்த்தா | ரூபியா | பஹாசா |
| தாய்லாந்து | 0066 | பாங்கொக் | பாத் | தாய் |
| மியான்மர் | ........ | யங்கூன் | கயாத் | பர்மீஸ் |
| பிலிப்பைன்ஸ் | 0063 | மணிலா | பெஸோ | பிலிப்பினோ |
| மலேசியா | 0060 | கோலாலம்பூர் | றிங்கிட் | மலாய் |
| சிங்கப்பூர் | 0065 | சிங்கப்பூர் | டொலர் | மலாய் |
| சுவீடன் | 0046 | ஸ்ரொக்கோம் | குரோனா | சுவீடிஸ் |
| நோர்வே | 0047 | ஒஸ்லோ | குறோண் | நோர்வேயியன் |
| ஜேர்மனி | 0049 | பொண் | மார்க் | ஜேர்மன் |
| சுவிற்சர்லாந்து | 0041 | பேர்ண் | பிராங் | ஜேர்மன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 0092 | இஸ்லாமாபாத் | ரூபாய் | உருது |
| சிம்பாப்வே | ....... | ஹராரே | டொலர் | ஆங்கிலம் |
| கியூபா | ....... | ஹவானா | பெஸோ | ஸ்பானிஸ் |
| தென்னாபிரிக்கா | 0027 | பிறிற்றோறியா | ராண்ட் | ஆபிரிக்கான் |
| இத்தாலி | 0039 | றோம் | லிரா | இத்தாலி |
| ரஷ்யா | 007 | மொஸ்கோ | றூபிள் | ரஷ்யன் |
| உக்ரைன் | 00380 | கீவ் | ஹிரிவ்னியா | உக்ரைன் |
| வியட்னாம் | 0084 | கோசிமின்நகர் | டோங் | வியட்னாம்மீஸ் |
| ரூமேனியா | ....... | புக்காரெஸ்ற் | லியு | ரூமேனியா |
| குறேசியா | ....... | ஸாக்ரெப் | குனா | குறேசியன் |
| யூகோஸ்லாவியா | ....... | பெல்கிறேட் | புதியதினார் | கோபோ |
| | | | | குறேசியன் |

## புதுப்புனைவுகள் (Inventions)

| புனைவு | கண்டுபிடித்தவர் | ஆண்டு | நாடு |
|---|---|---|---|
| அச்சுக்கூடம் | ஜோகான் கூடன்பார்க் | 1455 | ஜேர்மனி |
| அணுக்குண்டு | றொபட்ஒப்மண்பெய்மர் | 1945 | அமெரிக்கா |
| இயந்திரத்துப்பாக்கி | ஜேம்ஸ்பக்கின் | 1718 | பிரிட்டன் |
| X - கதிர் | வில்ஹெல்ம்ராண்ட்ஜுகின் | 1895 | ஜேர்மனி |
| ஒலிபெருக்கி | ஹோரஸ்சார்ட் | 1900 | பிரிட்டன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கிரமபோன் | தோமஸ் அல்வா எடிசன் | 1878 | அமெரிக்கா |
| சலவை இயந்திரம் | ஷார்லி கொம்பனி | 1907 | அமெரிக்கா |
| சீமெந்து | யோசப் ஆப்ஸ்தின் | 1824 | பிரிட்டன் |
| சூப்பர் கம்பியூட்டர் | வானடேஷல் | 1976 | அமெரிக்கா |
| டீசல்எஞ்சின் | ருடோல்வ்டீசல் | 1895 | ஜேர்மனி |
| தானியங்கித் துப்பாக்கி | ஜான்பிறெஷினிங் | 1918 | அமெரிக்கா |
| சினிமா | நிககலஸ் | 1895 | பிரான்ஸ் |
| தொலைக்காட்சி | ஜோன்லக்கிபேட் | 1926 | பிரிட்டன் |
| தொலைபேசி | கிரகாம்பெல் | 1876 | அமெரிக்கா |
| தையல்மெசின் | திம்மொனியர் | 1829 | அமெரிக்கா |
| நீர்மூழ்கிக்கப்பல் | டேவிட்புஷ்னல் | 1776 | அமெரிக்கா |
| நியூட்ரன் குண்டு | சாமுவெல்மோஹென் | 1958 | அமெரிக்கா |
| பரசூட் | கார்ல்றெரின் | 1797 | பிரான்ஸ் |
| ஊற்றுமுனைப்பேனா | லூயிஸ்வாட்டர்மன் | 1884 | அமெரிக்கா |
| குமிழ்முனைப்பேனா | ஜோன்லொல்ட் | 1888 | அமெரிக்கா |
| மின்கலவடுக்கு | வோல்ற்றர் | 1800 | இத்தாலி |
| மின்மாற்றி | மைக்கல்பரடே | 1831 | பிரிட்டன் |
| றேடார் | டெய்லர், லியோசியங் | 1922 | அமெரிக்கா |
| லேசர் | சாள்ஸ்டவுண்ஸ் | 1960 | அமெரிக்கா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஹெலிகொப்டர் | ஏதியன்ஓஹ்மிச்சென் | 1924 | பிரான்ஸ் |
| சைக்கிள் | மக்மிலன் | 1839 | பிரிட்டன் |
| மோட்டார் சைக்கிள் | ஜி - டெயில்மர் | 1885 | ஜேர்மனி |
| குளிர்சாதனப்பெட்டி | ஜேம்ஸ்ஹாரிசன் | 1850 | அமெரிக்கா |
| | அலெக்சாண்டர் | | |
| | காட்லன் | | |
| கல்குலேட்டர் | வில்ஹெலம்ஷிக்காட் | 1623 | ஜேர்மனி |
| புகைப்படம் | ஜேயன்திப்சு | 1836 | பிரான்ஸ் |
| செயற்கை இதயம் | வில்லெமகோல்ட் | 1957 | நெதர்லாந்து |
| தட்டச்சுப்பொறி | பெல்லிகிறின்டாரி | 1808 | இத்தாலி |
| தீப்பெட்டி | ஜோன்வோக்கர் | 1826 | பிரிட்டன் |
| ஐதரசன் குண்டு | எட்வேட்ரெல்லர் | 1952 | அமெரிக்கா |
| யுத்த டாங்கி | சுவின்டன் | 1914 | பிரிட்டன் |
| டைனமைட் | A நோபல் | 1867 | சுவீடன் |
| நைலோன் | கறோதஸ் | 1937 | அமெரிக்கா |
| றேயன் | ஸ்வான் | 1884 | பிரிட்டன் |
| காஸ் அடுப்பு | பன்சன் | 1855 | ஜேர்மனி |
| கைத்துப்பாக்கி | கோல்ட் | 1837 | அமெரிக்கா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நாள்போட்டி

1. தனிநபர் பெற்ற அதிகூடிய ஓட்டம்
சயீட் அன்வர் 194 (எதிர் இந்தியா)
2. அணி பெற்ற அதிக ஓட்டம்
இலங்கை 397 (எதிர் கென்யா)
3. குறைந்த ஓட்டம்
பாகிஸ்தான் 42 (எதிர் மே. இ. தீவுகள்)
4. கூடுதல் விக்கெட்
வாஸிம் அக்றம் (பாகிஸ்தான்)
5. கூடுதல் சதம்
சச்சின் ரெண்டுல்கர் (இந்தியா)
6. கூடுதல் மொத்த ஓட்டம்
டெஸ்மண்ட் (மே. இ. தீவுகள்)
7. கூடுதலான ஆட்டங்களில் கலந்து கொண்டவர்
முகமட் அசாருதீன் (இந்தியா)
8. 5000க்கு மேல் ஓட்டமும் 100 விக்கட்டுக்கு மேல் கைப்பற்றியவரும் விவியன் றிச்சட்ஸ்
9. குறைந்த பந்துகளில் சதம் பெற்றவர்
சயீட் அவ்றீடி (பாகிஸ்தான்) 37 பந்துகளில் பெற்றார் இலங்கைக் கெதிராக.

# காற்பந்து

உலகக் கோப்பைக்கான காற்பந்துப் போட்டிகள் இதுவரை 16 முறை நடைபெற்றுள்ளன, 4 ஆண்டுக்கொரு முறை நடைபெறும் இப் போட்டிகள் கடைசியாக 1998ல் பிரான்ஸில் இடம் பெற்றது. பிரான்ஸ் கோப்பையைக் கைப்பற்றியது. இது வரை பிறேசில் நாலு முறையும் இத்தாலி 3 முறையும் மேற்கு ஜேர்மனி 3 முறையும் உருகுவே ஆஜன்ரீனா என்பவை தலா 2 முறையும் பிரான்ஸ், இங்கிலாந்து என்பன ஒவ்வொரு முறையும் கோப்பையைக் கைப்பற்றி உள்ளன. 2002ம் ஆண்டு ஜப்பானும், தென்கொரியாவும் இணைந்து போட்டிகளை நடாத்தும்.

# டென்னிஸ்

## உலகின் முக்கிய போட்டிகள்

1. விம்பிள்டன்
2. யூ. எஸ். ஓப்பண்
3. பிரெஞ் ஓப்பண்
4. அவுஸ்திரேலிய ஓப்பண்
5. டேவிஸ்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடகளம் சாதனைகள்

| | | |
|---|---|---|
| 100m ஓட்டம் ஆண்கள் | – டொனவன் பெய்லி நேரம் (கனடா) | 9.84s |
| 200m ஓட்டம் ஆண்கள் | – மைக்கள் ஜோன்சன் | 19.32s |
| நீளம் பாய்தல் ஆண்கள் | – மைக் பௌவல் (அமெரிக்கா) | 8.95m |
| உயரம் பாய்தல் | – கோடோமேயர் (கியூபா) | 2 45m |
| 100m ஓட்டம் பெண்கள் | – புளோரன்ஸ் கிரிபித் ஜோய்னர் (அமெரிக்கா) | 10.49s |
| 200m ஓட்டம் பெண்கள் | – புளோரன்ஸ் கிரிபித் ஜோய்னர் | 21.34s |
| நீளம் தாண்டல் பெண்கள் | – காலின்சிஸ்டாயாகோவா (ரஸ்யா) | 7.52m |
| உயரம் தாண்டல் | – ஸ்ரெப்கா கொஸ்டினோவா (பல்கேரியா) | 2.09m |

## 20ம் நூற்றாண்டின் இணையற்ற அற்புதம்! இன்ரநெற் (Internet)

Computer உலகில் Network என்ற சொல் மிகவும் பரவலாகப் பழக்கத்தில் உள்ளது. Network என்பது ஒரே மாதிரியான செயற்பாட்டு அமைப்புக்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருத்தலாகும்.

1. Computer Network என்றால் என்ன?
ஒரு நோக்கப் பணிக்காக பல்வேறு கணிப்பொறிகளை இணைத்து தகவல் பரிமாற்றம் செய்து கொள்வது.

2. Internet என்றால் என்ன?
பல கம்பியூட்டர் நெற்வேக்குகள் இணைக்கப்பட்ட சுப்பர் நெற்வேக் இன்ரனெற் ஆகும்.
(Internet is a network of networks)

தமிழில் Internet இணையம் or வலையம் என வழங்கப்படுகிறது.

Internet க்கு International Net work என்றும் பொருள் கொள்ளலாம்.

3. Web servers அல்லது Web sites என்றால் என்ன?
மிகவும் சக்தி வாய்ந்த கம்பியூட்டர்களில் சேமித்து வைக்கப் பட்டுள்ள ஏராளமான தகவல்கள்.

4. Backbone Network என்றால் என்ன?

ஒரு நாட்டின் வெப் தளங்கள் (Web sites) அனைத்தையும் கேபிள் அல்லது நுண்ணலை அல்லது செயற்கைக் கோள் ஒன்றின் உதவியுடன் இணைத்து வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய் நடுநாயக Net work அமைத்துப் பராமரிப்பவர் JSP (Internet Service Providers) என அழைக்கப்படுவர்.

5. Internet தொடர்புக்கு எவை தேவை?
   1. கம்பியூட்டர்
   2. SJD தொலைபேசி இணைப்பு
   3. மோடம்

6. Internet ல் என்ன இருக்கிறது?
   1. தகவல் களஞ்சிய வசதி
   2. கடிதப் போக்குவரத்து வசதி (E - mail)
   3. பத்திரிகைகள்
   4. குழு விவாதங்கள்
   5. கல்வி சம்பந்தமான விடயங்கள்
   6. பொழுதுபோக்கு அம்சங்கள்
   7. வணிகம் தொடர்பான விடயங்கள்
   8. வேலைவாய்ப்பு விபரங்கள்
   9. கலை கலாச்சாரம்
   10. தொலைபேசி வசதி

7. Internet ன் உரிமையாளர் யார்?

எந்தவொரு தனிநபரோ, குழுவோ, நிறுவனமோ, அரசாங்கமோ Internet மீது உரிமை கொண்டாட முடியாது. Internet தகவல்களைப் பெற்றுக்கொள்ள Internet வாயில் களை (Internet gate way) நிறுவி Internet ல் உலாவர வழித்தடம் ஏற்படுத்தித் தந்த JSD கள் வாடிக்கையாளரிடம் சொற்ப கட்டணத்தை அறியவிடலாமே தவிர உரிமை கொண்டாட முடியாது.

8. Internet தமிழில் தகவல்கள் தருகிறதா?


ஆம் 1996 முதல் (W W W) எனப்படும் உலகளாவிய வலயத்தில் தமிழ் நுழைந்துள்ளது. தமிழ், தமிழர், தமிழ் நாடு, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பத்திரிகைகள் சில, தமிழ்த் திரைப்படம் போன்றவற்றினை தமிழ்மொழி மூலம் படித்தறிய முடிகிறது. ஆனால் தமிழ்மொழியில் படித்தறிய தமிழ் எழுத்து வடிவத்துக்கான Soft Ware (Tamil true) type font) நமது Computer களில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

9. நமது யாழ்ப்பாணத்துக்கும் Internet தொடர்பு கிடைக்குமா? ஆம் பாதுகாப்புத் தரப்பு அனுமதி வழங்கினால் வெகு விரைவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்கள் குடும்பத் தலைவன்

**வி. நவரத்தினம்**

அவர்களின்

மறைவு தெரிந்து வந்து எங்கள் துயர் குறைத்த அன்பர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், ஆத்மசாந்தி நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு சிறப்பித்த அத்தனை அன்பர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.



'அன்னை இல்லம்'
கோண்டாவில்.

அன்புடன்
குடும்பத்தவர்.

★ ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org